# க. பொ. த ( சா.த ) முன்னோடி வினாத்தாள் - 2020

## விவசாயமும் உணவுத் தொழினுட்பமும் (81) – I, II

**இது கல்வியமைச்சின் வழிகாட்டலுக்கமைவாகத் தயாரிக்கப்பட்டது.** **நேரம் -மூன்று மணித்தியாலம்**

**அறிவுறுத்தல்கள் :**

- **எல்லா** வினாக்களுக்கும் விடை தருக.
- விடைத்தாளின் உரிய இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- விடைத்தாளின் பின்பக்கத்தில் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை கவனமாக வாசித்து விடையெழுதுக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1) (2) (3) (4) என எண்ணிடப்பட்ட விடைகளில் **சரியான அல்லது மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்து அதனை விடைத்தாளின் பின்பக்கத்தில் காட்டப்பட்டுள்ள அறிவுறுத்தல்களிற்கமைய புள்ளடி (X) இடுவதன் மூலம் காட்டுக.


1. இலங்கையின் மிகப் பெரிய பல்நோக்கு அபிவிருத்தித் திட்டம் எது?


   (1) கல்லோயா அபிவிருத்தித் திட்டம் (2) மகாவலி அபிவிருத்தித் திட்டம்
   (3) உடவளவை அபிவிருத்தித் திட்டம் (4) முத்துக்கண்டிய அபிவிருத்தித் திட்டம்

2. கீழே A, B, C ஆகிய வரிப்படங்களில் காட்டப்பட்டுள்ள, வானிலைத் தரவுகளைப் பெறுவதற்குப் பயன்படும் உபகரணங்களின் பெயர்களை முறையே கொண்ட விடையைத் தெரிவுசெய்க.

A



B


C


   (1) சூரிய ஒளிர்வுமானி, அனிலமானி, ஈரமானி
   (2) காற்றுத் திசைகாட்டி, உயர்வு - இழிவு வெப்பமானி, வெப்பமானி
   (3) ஞாயிற்றுக் கதிர்ப்புமானி, சூரிய ஒளிர்வுமானி, அனிலமானி
   (4) ஈர - உலர் குமிழ் வெப்பமானி, சூரிய ஒளிர்வுமானி, மழைமானி

3. இலங்கையின் தாழ்நாட்டு இடைவலயத்திற்குக் கிடைக்கும் வருடாந்த மழைவீழ்ச்சி,

   (1) 2500 mm இலும் அதிகமாகும். (2) 1750 mm – 2500 mm இற்கு இடைப்பட்டதாகும்.
   (3) 900 mm – 1750 mm இற்கு இடைப்பட்டதாகும். (4) 1750 mm இலும் குறைவாகும்.

4. இலங்கைக்கு மழைவீழ்ச்சி கிடைக்கும் முறைகள் தொடர்பான சில கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றுள் சரியானது எது?

   (1)தென்மேல் பருவக்காற்றின் மூலம் இலங்கையின் கிழக்கு மற்றும் வடக்குப் பகுதிகளுக்கு மழை கிடைக்கும்.
   (2)உலர் வலயத்தின் பெரும்போக விவசாய நடவடிக்கைகள் தென்மேல் பருவக்காற்றுடன் ஆரம்பமாகின்றன.
   (3)இடைப்பருவ மழை தொடர்ச்சியாக சில தினங்களுக்குப் பெய்யும்.
   (4)வளிமண்டலத்தில் ஏற்படும் அமுக்க மாற்றங்கள் காரணமாக சூறாவளி உருவாகும்.

5. பயிர்ச்செய்கைக்குத் தேவையான மண்ணீர் தொடர்பான கீழ்வரும் கூற்றுகளில் சரியானது எது?

   (1) மண்ணீரினால் நிரம்பலடைந்துள்ள மண்வளி அற்ற சந்தர்ப்பத்தில் தாவர வேர்களால் சுவாசிக்க முடியாது.
   (2) மண் களக்கொள்ளளவு நிலையில் உள்ளபோது பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்தல் வேண்டும்.
   (3) நிரந்தர வாடல் நிலையிலுள்ள தாவரத்திற்கு நீர்ப்பாசனம்செய்து அதனை பழைய நிலைமைக்குக் கொண்டுவரலாம்.
   (4) கனலடுப்பில் உலர்த்தப்பட்ட மண்மாதிரியில் பருகுநீர் மாத்திரம் எஞ்சியிருக்கும்.

6. களி மற்றும் சேதனக் கூழ்நிலைத் துணிக்கைகளிடையேயான ஒற்றுமை, அவை இரண்டும்,

   (1) சேதனக் கூழ்நிலைத் துணிக்கைகளாகும். (2) கனிப்பொருட்களினால் ஆனவையாகும்.
   (3) விட்டம் 0.002mm இலும் குறைவானவையாகும். (4) அறுகோண வடிவுடையனவாகும்.

7. நன்கு விருத்தியடைந்த மண் பக்கப்பார்வையில் கழுவியகற்றப்படும் படை தொடர்பான சரியான கூற்று யாது?

(1) இங்கு தாய்ப்பாறை சிதைவடைவதன் மூலம் உருவாகிய கனிப்பொருட்கள் மாத்திரம் காணப்படும்.
(2) இது சேதனப் பொருட்களை அதிகம் கொண்டுள்ளதால் கருமை நிறமானதாகும்.
(3) இது தாய்ப்பாறைப் படைக்கும் கொள்ளும் படைக்கும் இடையில் அமைந்திருக்கும்.
(4) இது மேற்படையிலிருந்து கழுவியகற்றப்படும் பதார்த்தங்களைக் கொண்டிருக்கும்.

8. நைஸ் எனப்படுவது, இலங்கையில் அதிகளவில் காணப்படும் பாறை வகையாகும். கீழ்வரும் எப்பாறை உருமாறுவதனால் நைஸ் பாறைகள் உருவாகும்?

(1) குவாட்ஸ் (2) கிரனைற்று
(3) பெக்மரைற்று (4) டொலமைற்று

9. ரூட்டேசியேக் குடும்பத்தைச் சேர்ந்த பயிர்களைக் கொண்ட தொகுதி எது?

(1) இஞ்சி, மஞ்சள், வெங்காயம் (2) எலுமிச்சை, தோடை, விளாத்தி
(3) கமுகு, தென்னை, கித்துள் (திப்பிலிப் பனை) (4) மிளகாய், கத்தரி, தக்காளி

10. இயந்திர வலுவினால் தொழிற்படும் முதற் பண்படுத்தல் உபகரணச் சோடியாக அமைவது,

(1) வட்டத்தட்டுக் கலப்பை, சுழல் கலப்பை (2) திசைமாற்றத்தக்க இறகுகலப்பை, ஜப்பானிய சுழல்களைகட்டி
(3) இறகு கலப்பை, வட்டத்தட்டுக் கலப்பை (4) சாலிடு கருவி, முட்கலப்பை

11. பயிர்த்தாபிப்பு தொடர்பான சரியான கூற்றைத் தெரிவுசெய்க.

(1) பயிரத்தாபிப்பு உபகரணங்கள் மூலம் பயிர்களை நடுவதனால் நேரத்தையும் உழைப்பையும் சிக்கனப்படுத்தலாம்.
(2) விதையிடு கருவியைப் பயன்படுத்தி நாற்றுக்களை நட முடியும்.
(3) பயறு, கௌபி ஆகிய வித்துக்களை நடுவதற்கு எப்போதும் விதையிடு கருவியைப் பயன்படுத்த வேண்டும்.
(4) அன்னாசிச் செடிகள் ஐங்கோண முறையில் நாட்டப்படும்.

12. நன்மை பயக்கும் பெரும்பாலான அங்கிகள் இருக்க தீங்கு பயக்கும் அங்கிகள் அழிவடைவது, கீழ்வரும் எந்த மண் தொற்றுநீக்கல் முறையின் போதாகும்?

(1) கொதிநீரிட்டுத் தொற்றுநீக்கல்
(2) எரிப்பதன் மூலமான தொற்றுநீக்கல்
(3) சூரிய வெப்பத்தினால் தொற்றுநீக்கல்
(4) இரசாயனப் பதார்த்தத்தினால் தொற்றுநீக்கல்

13. நெற்பயிர்ச்செய்கையில் நாற்று நடுகைக் கருவி மூலம் நடுவதற்கான நாற்றுக்களைப் பெற்றுக்கொள்வதற்குப் பயன்படுவது,

(1) நொரிடொக்கோ நாற்றுமேடையாகும் (2) டபொக் நாற்றுமேடையாகும்.
(3) தட்டு நாற்றுமேடையாகும். (4) சேற்று நாற்றுமேடையாகும்.

14. தூவல் நீர்ப்பாசனம் தொடர்பான சில கூற்றுகள் வருமாறு,

A – சால் பாசனத்துடன் ஒப்பிடுகையில் வினைத்திறன் அதிகமாகும்.
B – மண்ணரிப்பு நிகழும்.
C – பசளை மற்றும் விவசாய இரசாயனங்களை நீருடன் கலந்து பிரயோகிக்க முடியும்.

மேலுள்ள கூற்றுகளில் மிகச் சரியானது / சரியானவை,

(1) A , B ஆகியன மாத்திரம். (2) B , C ஆகியன மாத்திரம்.
(3) A , C ஆகியன மாத்திரம். (4) A , B, C ஆகிய அனைத்தும்.

15. பயிர்ச்செய்கையின்போது பயன்படுத்தப்படும் நீர்ப்பாசன முறைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A. மண்ணினுள் நுண்துளைக் குழாய்களை இடல்
B. சால் பாசனம்
C. துளிமுறைப் பாசனம்
D. பாத்திப் பாசனம்

மேற்குறித்தவற்றுள் மேற்பரப்பு நீர்ப்பாசன முறைகளாவன,

(1) A, B ஆகியன மாத்திரம். (2) B, C ஆகியன மாத்திரம்.
(3) C, D ஆகியன மாத்திரம். (4) B, D ஆகியன மாத்திரம்.

16. தோடைமரத்தின் முதிர்ந்த இலைகள் மஞ்சள் நிறமாக மாறி பூக்களும் காய்களும் விகாரமடைந்து வளர்ச்சி குன்றி தாவரம் குறள்நிலை அடைந்துள்ளமையை அவதானிக்க முடிந்தது. இவ்வறிகுறிகளுக்கான போசணைக் குறைபாடாக அமைவது,

(1) நைதசரன் (N) (2) கல்சியம் (Ca)
(3) பொசுபரசு (P) (4) பொற்றாசியம் (K)

17. இரசாயனப் பசளைப் பயன்பாட்டின் அனுகூலங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.
A - விரைவாக தாவரங்களால் அகத்துறிஞ்சப்படும்.
B – வெளிக்காட்டப்படும் குறைபாட்டு அறிகுறிகளுக்கேற்ப இரசாயனப் பசளையைப் பிரயோகிக்க முடியும்.
C – விலை குறைவானது.
மேலுள்ள கூற்றுகளில்,

(1) A, B ஆகியன மாத்திரம் சரியானவை. (2) B, C ஆகியன மாத்திரம் சரியானவை.
(3) A, C ஆகியன மாத்திரம் சரியானவை. (4) அனைத்துக் கூற்றுக்களும் சரியானவை.

18. A, B, C எனப் பெயரிடப்பட்ட மூன்று களைகளின் உருவவியல் இயல்புகள் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| A | B | C |
|---|---|---|
| நீண்ட ஒடுங்கிய இலை, சமாந்தர நரம்பமைப்பு கொண்டது. | நீண்ட ஒடுங்கிய இலை, சமாந்தர நரம்பமைப்பு கொண்டது. | இலைகள் அகன்றவை, வலையுரு நரம்பமைப்பைக் கொண்டது. |
| தண்டு உருளை வடிவானது. துளை கொண்டது. | தண்டு முக்கோண வடிவானது. உள்ளீடு கொண்டது. | பெரும்பாலும் தண்டு உருளை வடிவானது. உள்ளீடு கொண்டது. |

மேற்தரப்பட்ட இயல்புகளுக்கு அமைய A, B, C ஆகிய களைகளாக அமையத்தக்கன முறையே,

(1) குப்பைமேனி, மஞ்சட்கோரை, சேறுபடாச்செல்வன் (2) சேறுபடாச்செல்வன், மஞ்சட்கோரை, குப்பைமேனி
(3) குப்பைமேனி, சேறுபடாச்செல்வன், மஞ்சட்கோரை (4) சீதேவியார் செங்கழுநீர், மஞ்சட்கோரை, குப்பைமேனி

19. தாவர நோய்களின் பொதுவான இயல்புகள் சில கீழே தரப்பட்டுள்ளன.
A. தாவரங்கள் குறள் நிலையடைதல் B. வேர்களில் முடிச்சுக்கள் ஏற்படல்
C. இலைகள் பன்னிறப்படல் D. வெளிறல்
மேற்குறிப்பிட்டவற்றுள் தாவர வைரசு நோய்களுக்கான அறிகுறிகளாக அமைவன,

(1) A, C ஆகியன மாத்திரம். (2) A, D ஆகியன மாத்திரம்.
(3) B, D ஆகியன மாத்திரம். (4) B, C ஆகியன மாத்திரம்.

20. அந்திராக்னோஸ் நோயின் நோய்க்காரணி,

(1) கொலரோற்றிக்கம் (Colletotrichum) (2) பித்தியம் (Pithium)
(3) றைசொக்ரோனியா (Rhizoctonia) (4) பியூசாரியம் (Fusarium)

21. நெற்பேதங்களின் பொதுவான இயல்புகள் சில கீழே தரப்பட்டுள்ளன.
A – குட்டையானது B – பீடைத்தாக்கம் குறைவு.
C – மட்டம் பெயர்தல் குறைவு D – நெல், வைக்கோல் விகிதம் அதிகம்
மேற்குறித்தவற்றுள் பாரம்பரிய நெற்பேதங்களின் இயல்புகளாக அமைவன,
(1) A, B ஆகியன மாத்திரம். (2) C, D ஆகியன மாத்திரம்.
(3) B, C ஆகியன மாத்திரம். (4) A, D ஆகியன மாத்திரம்.

22. BG 351, BG 450 ஆகிய நெற்பேதங்களின் வயது முறையே,
(1) 3 மாதம், 4 மாதம் (2) 3 ½ மாதம், 4 ½ மாதம்.
(3) 3 மாதம், 4 ½ மாதம் (4) 4 ½ மாதம், 3 ½ மாதம்.

23. பதியமுறை இனப்பெருக்க பகுதிகளையும் அவற்றுக்கான உதாரணங்களையும் சரியாகக் கொண்ட தெரிவு எது?
A – தண்டுக்கிழங்கு - சேம்பு, உருளைக்கிழங்கு B – வேர்த்தண்டுக் கிழங்கு - இஞ்சி, மஞ்சள்
C – ஓடி - வல்லாரை, ஸ்ரோபரி D – குமிழ் - லில்லி, வெள்ளைப்பூடு
(1) A, B ஆகியன மாத்திரம். (2) B, D ஆகியன மாத்திரம்.
(3) A, B, C ஆகியன மாத்திரம். (4) B, C, D ஆகியன மாத்திரம்.

24. தாவர ஒட்டுதலுக்கென ஒட்டுக்கட்டையைத் தெரிவுசெய்யும்போது கவனத்திற் கொள்ள வேண்டிய சில விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A – ஒட்டுக்கட்டையின் அரும்புகள் துளிர்விட அண்மித்த நிலையில் காணப்படல்

B – நோய் பீடைகளுக்குத் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மை

C – பாதகமான மண் நிலைமைகளுக்குத் தாக்குப்பிடிக்கக்கூடிய திறன்

D – அளவுரீதியிலும் தரரீதியிலும் அதிக விளைச்சலைத் தரக்கூடிய பேதமாக இருத்தல்

இவற்றுள் மிகச் சரியான கூற்றுகளாக அமைவன,

(1) A, B ஆகியன மாத்திரம்.
(2) B, C ஆகியன மாத்திரம்.
(3) A, C ஆகியன மாத்திரம்.
(4) A, B, C ஆகிய அனைத்தும்.

25. பயிர்ச்செய்கையில் பயன்படுத்தப்படும் தற்காலிக ஆளுகைப் பயிர்ச்செய்கைக் கட்டமைப்புக்கள் அடங்கிய தொகுதி பின்வருவனவற்றுள் யாது?

(1) வரிசை மறைப்பு, பாத்தி மறைப்பு, சூரிய இனப்பெருக்கி, வலையில்லம்
(2) தனிச்செடி மறைப்பு, பாத்தி மறைப்பு, வலையில்லம், பொலித்தீன் இல்லம்
(3) தனிச்செடி மறைப்பு, வரிசை மறைப்பு, பாத்தி மறைப்பு, சூரிய இனப்பெருக்கி
(4) சூரிய இனப்பெருக்கி, கண்ணாடி இல்லம், வலையில்லம், பாத்தி மறைப்பு

26. இழையவளர்ப்புத் தொடர்பான சில கூற்றுகள் வருமாறு.

A – ஏராளமான நாற்றுக்களைப் பெறமுடியும்.

B – நோயுற்ற தாய்த் தாவரத்திலிருந்து ஆரோக்கியமான நாற்றுக்களைப் பெறமுடியும்.

C – ஏனைய பதிய நாற்றுக்களுடன் ஒப்பிடுகையில் காய்கள் தோன்ற எடுக்கும் காலம் குறைவாகும்.

D – நாற்றுக்களைக் களஞ்சியப்படுத்தலும் கொண்டுசெல்லலும் இலகுவாகும்.

மேற்குறித்த கூற்றுகளில் இழையவளர்ப்பின் அனுகூலங்களாக அமைவன,

(1) A, B, C ஆகியன மாத்திரம்.
(2) B, C, D ஆகியன மாத்திரம்.
(3) A, C, D ஆகியன மாத்திரம்.
(4) A, B, D ஆகியன மாத்திரம்.

27. "சுழற்சிமுறைப் பயிர்ச்செய்கை" எனும் பதம் மிகச் சரியாக வரையறுக்கப்பட்டுள்ள கூற்று எது?

(1) குறித்த ஒழுங்கில் தெரிவுசெய்யப்பட்ட பயிர்கள் சிலவற்றை ஒரே நிலத்தில் போகத்திற்கு போகம் மாற்றிப் பயிர் செய்தலாகும்.
(2) குறித்த நிலத்தில் இரண்டு அல்லது அதிக பயிர்வகைகளை குறித்த இடைவெளியின்றி பயிர்செய்தலாகும்.
(3) குறித்த பயிரொன்றின் வாழ்க்கை வட்டம் முடிய முன்னர் மற்றுமொரு பயிரை முதல் பயிரிடையே பயிர்செய்து ஒரே நிலத்தில் இரு பயிர்களைப் பயிர்செய்தலாகும்.
(4) குறித்த நிலத்தில் ஒரு பயிரை மாத்திரம் தொடர்ச்சியாகப் பயிர்செய்தலாகும்.

28. பயிர்களின் அறுவடைக்குப் பிந்திய இழப்புக்களில் அறுவடைக்குப் பிந்திய காரணிகளும் முன் அறுவடைக் காரணிகளும் செல்வாக்குச் செலுத்தும். இக்காரணிகள் தொடர்பான சரியான விடையைத் தெரிவுசெய்க.

(1) முன் அறுவடைக் காரணிகள் - பயிர்களைத் தெரிவு செய்தல், மண் காரணிகள், அறுவடை செய்தல்
(2) முன் அறுவடைக் காரணிகள் - நீர்ப்பாசனம், பசளையிடல், விவசாய இரசாயனப் பயன்பாடு, வானிலைக் காரணிகள்.
(3) அறுவடைக்குப் பிந்திய காரணிகள் - விளைச்சல்களைப் பொதிசெய்தல், விவசாய இரசாயனப் பயன்பாடு, வானிலைக் காரணிகள், விளைச்சலைக் கொண்டுசெல்லல்.
(4) அறுவடைக்குப் பிந்திய காரணிகள் - நீர்ப்பாசனம், விவசாய இரசாயனப் பயன்பாடு, களஞ்சியப்படுத்தல், விளைச்சல்களைத் தயார்படுத்தல்

29. விற்றமின்கள், அவற்றின் தொழிற்பாடுகள், குறைபாட்டு அறிகுறிகள் என்பன சரியாகக் காட்டப்பட்டுள்ள நிரல்களைக் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.

| | விற்றமின் வகை | தொழிற்பாடு | குறைபாட்டு அறிகுறிகள் |
|---|---|---|---|
| A | A | தோல், கண்களின் ஆரோக்கியம் | மாலைக்கண், சுவாச நோய்கள் ஏற்படல் |
| B | C | பல், என்பு ஆகியவற்றின் வளர்ச்சி | என்பு பலவீனமடைதல் |
| C | D | கல்சியம், பொசுபரசு ஆகியவற்றின் அகத்துறிஞ்சல் | பல், என்பு சிதைவடைதல் |
| D | K | குருதியுறைவதற்கு அவசியம் | குருதியுறைதல் தாமதமடைதல் |

(1) A, B, C ஆகியன மாத்திரம்.
(2) B, C ,D ஆகியன மாத்திரம்.
(3) A, B, D ஆகியன மாத்திரம்.
(4) A, C, D ஆகியன மாத்திரம்.

30. உடற் திணிவுச் சுட்டியைக் (Body Mass Index – B.M.I) கணிக்கும் சமன்பாடு மற்றும் அலகுகள் என்பனவற்றைச் சரியாகக் கொண்டது எது?

(1) BMI= $\frac{\text{உடற்றிணிவு (kg)}}{\text{உயரம்}^2 \text{ (m}^2\text{)}}$

(2) BMI= $\frac{\text{உடற்றிணிவு}^2}{\text{உயரம் (m)}}$

(3) BMI= $\frac{\text{உடற்றிணிவு}^2 \text{ (kg}^2\text{)}}{\text{உயரம்}^2 \text{ (cm}^2\text{)}}$

(4) BMI= $\frac{\text{உடற்றிணிவு (g)}}{\text{உயரம் (cm)}}$

31. உணவு நஞ்சாதல் தொடர்பாகக் கீழே தரப்பட்டுள்ளவற்றுள் பிழையான கூற்று யாது?

(1) மரவள்ளியில் அடங்கியுள்ள லினமரின் காரணமாக ஏற்படும் சயனைட்டு நச்சுத்தன்மை உடையது.
(2) சோயா அவரையில் அடங்கியுள்ள ஈயம் போன்ற பார உலோகங்கள் உணவுடன் கலப்பதால் உணவு நஞ்சாதல் நிகழும்.
(3) நெத்தலியுடன் தக்காளியைச் சேர்த்து அடிக்கடி உண்பதனால் உருவாகும் கல்சியம் ஒட்சலேற்று சிறுநீரகத்தில் படிவதால் சிறுநீரகக் கற்கள் தோன்றும்..
(4) உணவின் மீது நிகழும் சில நுண்ணங்கிகளின் தொழிற்பாட்டினால் உணவு நஞ்சாகும்.

32. பாய்ச்சராக்கம் மூலம் பாலுற்பத்திகளை நீண்டகாலம் பேணுவது தொடர்பான சில கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன.

A. - நோயாக்கி நுண்ணங்கிகள் முழுமையாக அழிக்கப்படுவதோடு நுண்ணங்கிகளின் வித்திகள் அழிக்கப்படுவதில்லை.
B. - நுண்ணங்கிகள் மற்றும் வித்திகள் முழுமையாக அழிக்கப்படாததால் அவற்றை சாதாரண சூழலில் வைக்கும்போது விரைவில் அவை பழுதடையும்.
C. - பாய்ச்சராக்கம் செய்யப்பட்ட உணவுகளை 8 – 12 மாதங்கள் வரை சாதாரண சூழல் வெப்பநிலையின் கீழ் பழுதடையாது வைத்திருக்க முடியும்.

மேலுள்ளவற்றில் சரியான கூற்றுகளாக அமைவன,

(1) A, B ஆகியன மாத்திரம்.
(2) B, C ஆகியன மாத்திரம்.
(3) A, C ஆகியன மாத்திரம்.
(4) A, B, C ஆகிய அனைத்தும்

33. மரக்கறிகள் குளிரூட்டல் மூலமும் இறைச்சி, மீன்கள் ஆழ்குளிரூட்டல் மூலமும் களஞ்சியப்படுத்தப்படும். இவற்றுக்கு உகந்த வெப்பநிலைகள் முறையே,

(1) 4°C, -18 °C (2) -18°C, 4 °C (3) 0°C, 100 °C (4) -10°C, 10 °C

34. இந்திய மாட்டு வர்க்கங்களுடன் ஒப்பிடுகையில் ஐரோப்பிய மாட்டு வர்க்கங்கள்,

(1) அதிக சூழல் வெப்பநிலைக்குத் தாக்குப்பிடிக்கக் கூடியனவாகும்.
(2) நுன்கு விருத்தியடைந்த ஏரி, அலைதாடை ஆகியவற்றைக் கொண்டிருக்கும்.
(3) உயர் பாலுற்பத்தி கொண்டனவாகும்.
(4) உண்ணிக் காய்ச்சல் மற்றும் புற ஒட்டுண்ணிகளுக்குத் தாக்கப்பிடிக்கக் கூடியனவாகும்.

35. பசுக்களுக்கு ஏற்படக்கூடிய அனுசேப நோய்களில் ஒன்று,

(1) தொண்டையடைப்பான்
(2) மடியழற்சி
(3) பாற்காய்ச்சல்
(4) கால்வாய் நோய்

36. ஒரு நாள் வயதுடைய கோழிக் குஞ்சுகளை முட்டையிடும் வரை பராமரிக்கையில் அவற்றின் ஒவ்வொரு பருவத்தினதும் வயதெல்லை எந்த நிரலின் மூலம் சரியாகக் காட்டப்பட்டுள்ளது?

| | குஞ்சுப் பருவம் (வாரம்) | வளர்ச்சிப் பருவம் (வாரம்) | முட்டையிடும் பருவம் (வாரம்) |
|---|---|---|---|
| (1) | 0 - 2 | 2 – 8 | 8 வாரங்களின் பின் |
| (2) | 0 - 4 | 4 - 18 | 18 வாரங்களின் பின் |
| (3) | 0 - 6 | 6 - 8 | 8 வாரங்களின் பின் |
| (4) | 0 - 8 | 8 - 18 | 18 வாரங்களின் பின் |

37. ஒரு கறவைக் காலத்தின் போதான சாராசரிப் பாலுற்பத்தி அளவுகளின் ஏறுவரிசைக்கேற்ப கறவைப்பசு வர்க்கங்களை ஒழுங்கில் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.

(1) பிறீசியன், அயர்சயர், ஜேர்சி, சிவப்புச் சிந்தி

(2) சிவப்புச் சிந்தி, ஜேர்சி, அயர்சயர், பிறீசியன்

(3) அயர்சயர், பிறீசியன், சிவப்புச் சிந்தி, ஜேர்சி

(4) ஜேர்சி, பிறீசியன், அயர்சயர், சிவப்புச் சிந்தி

38. ஒரு பண்ணையில் கோழிக்குஞ்சுகள் சோர்வாகவும் உணவில் நாட்டமின்றி இறகுகளைப் போர்த்தியவாறும் காணப்பட்டதுடன் குருதி கலந்த கழிச்சலும் காணப்பட்டது. 5 – 10 நாட்களில் அவற்றில் 70% ஆன கோழிக்குஞ்சுகள் இறந்தன. இது,

(1) இறணிக்கற் நோயாகும்.

(2) கொக்சிடியோசிசு நோயாகும்.

(3) நாடாப்புழு நோயாகும்.

(4) புல்லோரம் நோயாகும்.

39. உணவுப்பொதி மற்றும் அதனுள் உள்ளடங்கிய உணவுப் பதார்த்தம் ஆகியன உயர் வெப்பநிலைக்குட்படுத்தப்பட்டு நற்காப்புச் செய்யப்படுவது,

(1) வெற்றிட நிலைமைப் பொதியிடலின் போதாகும்.

(2) மிதப்படுத்தப்பட்ட அகச் சூழலின்கீழ் பொதியிடலின் போதாகும்.

(3) கிருமியழிக்கப்பட்ட நிபந்தனையின் கீழ் பொதியிடலின் போதாகும்.

(4) வளித்தடை நிலைமையின் கீழ் பொதியிடலின் போதாகும்.

40. 1980 இன் 26 ஆம் இலக்க உணவுச் சட்டத்தில் குறித்துக் காட்டப்பட்டிருப்பது,

(1) நுகர்வோரின் விருப்பை அதிகரிக்கும் வகையில் உணவைத் தயாரிக்கும்போது பின்பற்றவேண்டிய சட்டதிட்டங்களாகும்.

(2) நுகர்வோரின் சுகாதாரத்திற்காக உணவு தொடர்பாக பின்பற்றவேண்டிய சட்டதிட்டங்களாகும்.

(3) சுகாதாரமான முறையில் உணவைப் பொதியிடும்போது பின்பற்றவேண்டிய சட்டதிட்டங்களாகும்.

(4) சுகாதாரமான முறையில் உணவை நற்காப்புச் செய்வதற்குப் பின்பற்றவேண்டிய சட்டதிட்டங்களாகும்.